-49-

சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலன் – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் - 2023-2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை - மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண்.51- உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு சிப்பம் கட்டுதல், பயிற்சி வழங்குதல்- ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை-உழவர் நலத் (வேவி3(2) துறை

அரசாணை (நிலை) எண். 85

நாள்: 10.05.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்
சித்திரை திங்கள் 27 ஆம் நாள்

படிக்கப்பட்டது:

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநரின் கடிதம் எண்.TNSFAC/587/2023, நாள்.12.04.2023.

ஆணை:

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2023-2024-ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்;

"உற்பத்தி செய்த தரமான பொருட்களை மதிப்புக் கூட்டி சந்தைப்படுத்த ஏதுவாக, சிப்பம் கட்டுதல் (Packaging) குறித்த சிறப்பு பயிற்சி சென்னை, பெருங்குடியில் உள்ள இந்திய சிப்பம் கட்டுதல் நிறுவனத்தின் (Indian Institute of Packaging) வாயிலாக 154 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இதனை விரிவுபடுத்தும் முயற்சியாக, மேலும் 164 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பயிற்சி வழங்கப்படும்"

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் அவர்கள், இத்திட்டத்தை செயல்படுத்துவதன் நோக்கத்தை பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

- உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் விளைபொருட்களுக்கு சிப்பமிடுதல் மற்றும் முத்திரையிடுதலுடன் கூடிய நிலையான குறியீடுகளை உருவாக்குதல்
- உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் விளைபொருட்களுக்கு இலாபகரமான விலையைப் பெறுதல்.
- சிப்பமிடுதல் மூலம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் விளைபொருட்களை சந்தைப்படுத்துவதில் தனியார் நிறுவனங்களுடன் போட்டியிடுதல்.

5. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் தனது கருத்துருவில், நவீன சிப்பமிடுதல் குறித்த பயிற்சிக்கான செலவினம், தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின் (TNSFAC) உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் ஊக்குவித்தல் நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

6. எனவே, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் கீழ்க்காணும் பொருண்மைகளுக்கு ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்:

i. 164 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (TNAU)/அரசு நிறுவனங்கள்/ தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் (TNSAMB) ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து இந்திய சிப்பம் கட்டுதல் நிறுவனத்தின் (IIP) மூலம் மண்டல வாரியாக நவீன சிப்பம் கட்டுதல் தொடர்பான பயிற்சி ரூ.15.00 இலட்சம் செலவில் வழங்குதல்.

ii. மேற்காண் தொகையினை தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின் (TNSFAC) உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் ஊக்குவித்தல் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்குதல்.

7. மேலே பத்தி 6-இல் உள்ள வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆராய்ந்து, இவ்வறிவிப்பினை செயல்படுத்த எதிர்காலத்தில் கூடுதல் நிதி ஏதும் மாநில நிதியிலிருந்து வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனையுடன் கீழ்க்காணும் பொருண்மைகளுக்கு ஆணை வழங்குகிறது:

i. 164 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (TNAU)/அரசு நிறுவனங்கள்/ தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் (TNSAMB) ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து இந்திய சிப்பம் கட்டுதல் நிறுவனத்தின் (IIP) மூலம் மண்டல வாரியாக நவீன சிப்பம் கட்டுதல் தொடர்பான பயிற்சி ரூ.15.00 இலட்சம் செலவில் வழங்க அனுமதி.

ii. மேற்காண் தொகையினை தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின் (TNSFAC) உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் ஊக்குவித்தல் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி.

8. இவ்வரசாணை, நிதித் துறையின் கோப்பு எண்.4518292/நிதி(வேளாண்மை-உ.ந.)/2023, நாள் 02.05.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை-32.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு, சென்னை-32.